# ரம்யா - சிறுகதை

ஜெகன் கம்ப்யூட்டரை ஸிவிட்ச் ஆன் செய்து மெயில் பார்ப்பதற்கான வெப்சைட்டை தேர்வு செய்து க்ளிக் பண்ணுகிறான். ஐ.டி, பாஸ்வோர்ட் கொடுத்ததும் மெயில்களுக்கான இன்பாக்ஸ் திறக்கிறது. அதில் மெயில் வந்துள்ளதா எனத் தேடுகிறான். ஆம், ரம்யாவின் மெயில் இருப்பதைப் பார்த்ததும் அவன் முகத்தில் மகிழ்ச்சி பரவுகிறது. ரம்யாவின் மெயிலை கிளிக் பண்ணியதும் கடிதம் கம்ப்யூட்டர் ஸ்கிரீனில் வருகிறது. அதை ஜெகன் படிக்கிறான்.

அன்புள்ள ஜெகன், நீ எப்படி இருக்கிறாய்? நீ தைரியமாகஇரு, மகிழ்ச்சியாக இரு, உனது நேரம் காலை 7,15க்கு நான் யாகூ மெசஞ்சரில் வெப்கேமில் தோன்றுவேன். அன்புடன், ரம்யா என்று கடிதம் ஆங்கிலத்தில் உள்ளது. ஜெகனுக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. பத்து நிமிடம் முன்னதாகவே யாகூ மெசஞ்சரைக் கிளிக் செய்து, ரம்யாவின் படம் வருவதைக் காண ஆவலோடு காத்திருக்கிறான். சொன்னபடி ரம்யாவின் மெசேஜ் வருகிறது. அடுத்த பத்து நிமிடத்தில் வெப் காம் பற்றி வந்ததை அவன் யஉஉநிவ பண்ணியவுடன் ரம்யாவின் இமேஜ் கம்ப்யூட்டர் புல் ஸ்கிரீனில் வருகிறது. ரம்யாவின் புன்னகை பூக்கும் முகம் தெரிகிறது, ஹலோ ஜெகன், ஸ்டார்ட் தி டே வித் கான்பிடென்ஸ், டூ எவிரிதிங் வித் இன்ட்ரெஸ்ட், ஹாவ் எ நைஸ் டே பை, பை ஜெகன் என ரம்யா இனிய குரலில் கூறுவதை ஜெகன் கேட்கிறான். மின்னல் போல் ரம்யா மறைந்து விடுகிறாள். புதிய நாளை நம்பிக்கையுடனும் செயல்களை ஆர்வத்துடனும் ஆரம்பிக்கிறான் ஜெகன். அவ்வப்போது ரம்யாவை இது போல கம்ப்யூட்டரில் பார்த்து உத்வேகம் பெறுவது ஜெகனின் வழக்கம். யார் இந்த ரம்யா? ஜெகனுக்கும் ரம்யாவுக்கும் என்ன தொடர்பு? விடை அறிய வேண்டுமானால், காலத் தேர் சில ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றாக வேண்டும். ................................

ஜெகன் கல்லூரியில் எம்.எஸ்.ஸி கம்ப்யூட்டர் சயின்ஸ் மாணவன், ரம்யா அதே கல்லூரியில் எம்'.எஸ்.சி. உளவியல் மாணவி. அருள் ஜெகனுடன் ஆரம்பப் பள்ளியிலிருந்து ஒன்றாகப் படித்து வரும் நண்பன். ஜெகன் சில காலமாக ரம்யா மேல் பைத்தியமாக அலைவது அருளுக்குப் பிடிக்கவில்லை.

ஜெகன், உனக்கு கொஞ்ச நாளா ரம்யா கிறுக்குப் பிடிச்சிருக்கு. கானல் நீர் போன்று இல்லாததை இருக்கிறதாக நினைக்கிறாய்.

;எனக்கு அறிவு இருக்கு, ரம்யா என்னை விரும்புவது உண்மை ,

ரம்யா உன்னை விரும்புகிறாளா? உனக்குத் திட்டமாகத் தெரியுமா?

ரம்யா என்னைப் பார்க்கும் போதெல்லாம் சிரிக்கிறாள். நான் ஏதாவது கேட்டால் பதில் சொல்றா, அதனால அவள் என்னை விரும்புறான்னு தோணுது ,

ஜெகன், நீ சரியான லூசுதான், ரம்யா இதே மாதிரி அவளுக்குத் தெரிஞ்ச பாய்ஸை பார்த்து சிரிக்கிறா, பேசுறா அதற்காக ரம்யா அத்தனை பேரையும் விரும்புறான்னு முடிவு பண்ணிவிடலாமா?

உனக்குத் தெரியாது அருள்! அவள் என் மேல் அளவு கடந்த ஆசை வைச்சிருக்கிறா. எனக்கு புக்ஸ் எல்லாம் கொடுத்து நான் பர்ஸ்ட் கிளாசில் பாஸ் பண்ண வேண்டும் என்று சொல்றா!

அடப் பைத்தியக்காரா! மற்றவர்களுக்கு உதவணும் என்பது அவளது இயற்கையான சுபாவம்டா. எந்த நல்ல காரியம் செய்வதற்கும் கொஞ்சமும் தயங்கமாட்டா? உனக்கு புக்ஸ் எல்லாம் கொடுத்து என்கரேஜ் பண்ணுவதால் அவள் உன்னை விரும்புவதாக தவறா முடிவு பண்ணாதடா முட்டாள் ! ,

அருள் ! உனக்குப் புரியாது, நான் அவளை முதல் முதலா பார்த்த அன்றைக்கே என் மனசிலே அவ இடம் பிடிச்சுட்டா, என் மனம் முழுவதும் அவள் தான் இருக்கிறாள் ! ,

டேய் ஜெகன் ! அறிவு கெட்டதனமாக பேசாதே நீ உன் மனசிலே அவளுக்கு இடம் தந்தால் மட்டும் போதுமா? அவள் தன் மனசிலே உனக்கு இடம் தர வேண்டாமா? ,

அவள் மனசிலே எனக்கு இடம் கொடுத்துதான் இருக்கிறாள். நான் அப்படித் தான் நினைத்துக் கொண்டிருப்பேன். நீ என்ன சொன்னாலும் கேட்கமாட்டேன் இது பற்றி இனி உன்னோடு பேச மாட்டேன் ! ,

தன் உயிர் நண்பன் அருள் கூறிய அறிவுரை எதுவும் ஜெகன் மண்டையில் ஏறவில்லை. இதன் முடிவு என்ன ஆகப் போகிறதோ என்ற கவலை அருளின் நிம்மதியைக் குலைக்கத் துவங்கியது.

ஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸஸ

ரம்யா! நான் உன்னோடு பேசணும் கொஞ்சம் நில்லேன் ! ஐ, ஆம், சாரி, ஜெகன் ! நான் போணும், பேசறதுக்கு நேரமில்லை ! , சரி, சரி ரம்யா, நீ போ, நாளைக்குப் பேசலாம் ,

ஜெகன் இவ்வாறு கூறி ரம்யாவை அனுப்பிவிட்ட பின்புதான் ஏமாற்றத்தின் வலியை தன் நெஞ்சில் உணர்ந்தான். ஒரு நாள் காத்திருக்க முடியாமல் தவித்தான். ஒரு கடிதம் எழுதி ரம்யாவின் தோழி நந்தினி ¨லம் ரம்யாவிடம் சேர்த்துவிட முடிவு செய்தான். அவசர அவரமாக நாலு வார்த்தை கிறுக்கினான். அதில் கீழ்க் கண்டவாறு எழுதியிருந்தான்.

மை டியர் ரம்யா ! ஐ லவ் யூ, யூ மஸ்ட் அக்செப்ட் மீ, இப் யூ ரிப்யூஸ், ஐ வில் நாட் பி அலைவ், யுவர்ஸ் லவ்விங்லி, ஜெகன்!,

தோழி நந்தினி கொடுத்த கடிதத்தை ரம்யா படித்தாள். அவளுக்குப் பயங்கர அதிர்ச்சியாக இருந்தது. தன் பெற்றோரிடம் கூறி ஜெகனை எச்சரிக்கலாம் என நினைத்தாள். தோழியிடம் ஆலோசனை கேட்டாள். நந்தினி சொன்னபடி மறுநாள் ஜெகனைப் பார்த்து தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கூறினாள்.

;மிஸ்டர் ஜெகன் ! நான் உங்களை விரும்பவில்லை. என் பெற்றோர் ஒழுங்கு செய்பவரைத் தான் திருமணம் செய்வேன். இனி என்னைப் பார்க்கவோ, பேசவோ வேண்டாம். என்னை விட்டு விடுங்கள் !, ரம்யா இவ்வாறு ஜெகனிடம் கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் விருட்டென்று புறப்பட்டு நொடிப் பொழுதில் மறைந்து விட்டாள்.

ஜெகன் அணுகுண்டு தாக்குதலுக்கு ஆளான இடம் போல் ஆடிப்போய்விட்டான். ஏமாற்றத்தின் அதிர்ச்சி அலைகள் அவன் தலையில் இறங்கின. பூப்போன்ற மனத்தில் விழுந்த சம்மட்டி அடியைத் தாங்க முடியாமல் அவன் மனம் சிதறுண்டு போனது, அருள் உடன் வர வீட்டிற்குச் சென்றான். யாரோடும் எதுவும் பேசாமல், தனிமையில் அவனது அறையில் பொழுதைக் கழித்தான். இரவில் துாங்காமல் கிடந்தான்.

;ரம்யா என்னை ஏமாற்றி விட்டாள் எனக்கு ரம்யா வேண்டும் இ ரம்யா இல்லாமல் என்னால் இருக்க முடியாது என்று மாறி மாறி முணுமுணுத்துக் கொண்டேயிருந்தான் குளிப்பது, சாப்பிடுவது, காலேஜுக்குப் போவது இவற்றில் அக்கறையின்றி இருந்தான். ரம்யா, ரம்யா என்ற வார்த்தைகள் தான் அவனிடமிருந்து வந்த வண்ணமிருந்தன. அவனது நண்பன் அருளுக்கு ஜெகனின் நடவடிக்கைகள் சந்தேகத்தை உண்டாக்கின.

ஜெகனிடம் பேச்சுக் கொடுத்தான். ஜெகன், இன்று மாலை நாம் இரண்டு பேரும் சினிமாவுக்குப் போகப் போறோம். எந்தப் படத்துக்குப் போகலாம், சொல் ! ;நான் எந்த சினிமாவுக்கும் வரலை என்னைத் தனியாக விட்டுவிடு ,

;இல்லை ஜெகன் ! நீ கண்டிப்பாக என்னோடு வெளியே வரணும். அறையிலேயே அடைஞ்சி கிடக்கக் கூடாது ! நான் எங்கும் வர முடியாது, நீ உன் வேலையைப் பார் !

சரி ஜெகன், நீ எங்கும் வர வேண்டாம். நீ குளிச்சிட்டு, சாப்பிடு, தூக்கம் வந்தால் படுத்துத் தூங்கு !

எனக்குத் தூக்கம் வரவே மாட்டேங்குது ;அப்படின்னா, வா, நாம் டாக்டரைப் போய்ப் பார்ப்போம் ! ;எனக்கு டாக்டர் தேவையில்லை. ரம்யா தான் எனக்கு வேண்டும். ;ரம்யா இப்போ ஊரில் இல்லை , நீ பொய் சொல்ற, ரம்யா என்னைப் பார்க்கக் கூடாதுன்னு சொல்லிட்டா ,

ஜெகனுடன் பேசிப் பயனில்லை என்று அருள் உணர்ந்து கொண்டான். மன நிலை பாதிக்கப்பட்டவர்களை விட, அவர்களைக் கவனித்துக் கொள்கிறவர்கள் நிலைமை தான் பரிதாபத்துக்குரியது. மயக்க நிலையில் இருப்பவன் எப்படி வலியை உணர்வதில்லையோ, அது போன்றே மனநிலைபாதிப்புக்குள்ளானவர் துயரத்தை உணர்வதில்லை. ஜெகனது நிலையைக் கண்டு அவனது பெற்றோரும், உற்ற நண்பர்களும் மிகவும் வருந்தினர். ஒரு சில நேரம் ரம்யா மேல் அவர்களுக்குக் கோபம் உண்டானது.

அன்பினும் வலிய சக்தி உலகில் இல்லை. அணுவின் சக்தியைக் காட்டிலும் அதிக சக்தி அன்புக்குண்டு, அன்பின் காரணமாக நியாயம், நீதி கண்ணுக்குத் தோன்றுவதில்லை. அப்படித்தான் ஜெகன் மீது ஏற்பட்ட பரிவு காரணமாக ரம்யா பக்கம் உள்ள நியாயம் மறைக்கப் பட்டது.

ரம்யா மேல் குற்றஞ் சுமத்துவது எவ்வாறு நியாயமாகும்? ஆரம்பம் முதல் ரம்யா தனது நிலையை மிகவும் தெளிவாக வெளிப்படுத்தி இருந்தாள். ;ரம்யா தன்னை விரும்புகிறாள் என்று ஜெகன் தானாகக் கற்பனை செய்து கொண்டு, விடாப்பிடியாக ஒரு தலைப் பட்சமாக அவளை விரும்பியுள்ளான். அதற்கு ரம்யா எவ்வாறு பொறுப்பாளி ஆவாள் ?

ஜெகனுக்கு மனநிலை பாதிக்கப்பட்டது பற்றி ரம்யா அறிந்த போது, அதிர்ந்து போனாள். தன்னால் தான் ஜெகனுக்கு மனநிலை பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் மீண்டும் மீண்டும் தோன்றிய வண்ணம் இருந்தது. அவள் எந்த வகையிலும் பொறுப்பாளி அல்ல என்பது அவளை அறிந்தவர்கள் அனைவருக்கும் தெரியும். ரம்யாவும் சில நேரங்களில் தான் காரணமல்ல என்று திடமாக நம்பினாள். ஆனாலும் அவளது இளகிய மனத்தின் காரணமாக, அவளால் தான் ஜெகனுக்கு அப்படி நேர்ந்துவிட்டது என்று எண்ணி, எண்ணி நிம்மதியிழந்து நிற்கிறாள்.

ஜெகன் எப்படி இருக்கிறான் என அருளிடம் விசாரித்து அறிந்து கொண்டாள். நேரில் சென்று பார்ப்பது நிலைமையை இன்னும் மோசமாக்கி விடும் என்று அஞ்சி தனது இடத்தில் இருந்தபடியே கேட்டுத் தெரிந்து கொள்ள மனநல மருத்துவரிடம் ஜெகனை அழைத்துச் செல்லும் படி அருளிடம் கூறினாள்.

அருளும் படாதபாடு பட்டு ஜெகனின் ஒத்துழைப்பைப் பெற்று மன நல மருத்துவரிடம் கூட்டிச் சென்றான். மருத்துவமனையிலேயே சேர்த்துவிடும்படி டாக்டர் கூறினார். ஜெகனும் டாக்டர் ஆலோசனையைக் கேட்டுக் கொண்டான். முதலில் தூக்கம் தான் மிக மிகத் தேவை என்று கூறி தூக்கத்திற்கான ஊசி போட்டுள்ளார்கள். அவன் இரவு, பகல் என்ற வேறுபாடு இன்றி தொடர்ந்து தூங்கினான்.

ரம்யா ஜெகனுக்குச் சிகிச்சை அளித்து வரும் டாக்டரிடம் நேரில் சென்று விவரம் கேட்டாள். ;டாக்டர், ஜெகன் மீண்டும் பழைய நிலைக்கு வந்து விட முடியுமா? ;யெஸ், மிஸ் ரம்யா, படிப்படியாக ஜெகன் நிலை சீராகிவிடும். ஜெகனின் ஒத்துழைப்பு கிடைத்தால் விரைவில் குணமாக்கிவிடலாம் !

;தாங்க் யூ, டாக்டர், நல்ல மெடிசின்ஸ் கொடுங்க டாக்டர் என்ன செலவானாலும் பரவாயில்லை.

;மிஸ் ரம்யா, யூ ஆர் எ ஸ்டூடன்ட் ஆப் சைக்காலஜி மெடிகேஷனை விட சைக்கலாஜிக்கல் கவுன்சிலிங் தான் நல்ல பலனைத் தரும்.

;என்னால் தான் இந்த நிலை ஜெகனுக்கு ஏற்பட்டது என்ற குற்ற உணர்வு எனக்கு வந்து கொண்டே இருக்கு டாக்டர் ,

;அப்போ, உங்களுக்கும் நான் கன்சல்டிங் பீஸ் வாங்கனும் போல இருக்குதே. ஐ ஆம் ஜஸ்ட் ஜோக்கிங்.

;ஜெகனுக்குப் பூரண குணமாயிடுச்சின்னா, நீங்க எவ்வளவு பீஸ் கேட்டாலும், தருவதற்கு நான் ரெடி, டாக்டர் !

;நோ, நோ மிஸ் ரம்யா ! ரம்யாவுக்கும் இதற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. யூ நீட் நாட் ஹாவ் எனி கில்டி பீலிங் அட் ஆல் !

;ஓ.கே. டாக்டர் உங்க டரீட்மென்ட் நிச்சயமாக சக்செஸ்புல்லா இருக்கும் டாக்டர். நான் நம்புறேன் டாக்டர். சன்டே அன்னிக்கு வர்றேன். தாங்க் யூ டாக்டர் ! பை, மிஸ் ரம்யா !

ரம்யாவிடம் ஜெகனின் கடிதம் வந்த உடனேயே ரம்யா தன் பெற்றோரிடம் அது பற்றிக் கூறிவிட்டாள். அவர்களும் ரம்யாவிற்கு வேறுயாரும் கடிதம் தரும் முன்பு திருமணம் பண்ணி விட வேண்டும் என்ற முடிவில் முனைந்து செயல்பட்டனர். எப்படி கண்டுபிடித்தார்களோ தெரியவில்லை. சுரேஷ் என்ற என்ஜுனீயர் மாப்பிள்ளை வீட்டார் ரம்யாவின் போட்டோவைப் பார்த்த மாத்திரத்தில் சம்பந்தம் பேசி முடித்து விட்டனர். சுரேஷ் ஒரு முறை நேரில் வந்து ரம்யாவைச் சந்தித்துப் பேசி விட்டுப் போனான். சுரேஷ் ரம்யா திருமண நிச்சயதார்த்தத்திற்கு இரு வீட்டாரும் நாள் குறித்து விட்டனர்.

ஜெகனுடன் அறிமுகமான தொடக்கத்தில் முன்னொரு சமயம் ஜெகனுடன் உரையாடியது ரம்யாவின் நினைவுக்கு வந்தது. ;ஜெகன், வாழ்க்கையில் நாம் விரும்புவதெல்லாம் கிடைப்பதில்லை. விரும்பியது கிடைக்காத போது கிடைப்பதை விரும்புவதற்கு நாம் கற்றுக் கொள்ள வேண்டும். ரம்யா தொடர்ந்தாள். ;கண்ணதாசன் எழுதிய ஒரு திரைப்படப் பாடலில் இப்படி வரும், நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. ஆமாம், ஜெகன் நாம் நினைக்கிறதெல்லாம் நடந்து விட்டால், நாம் கடவுளைத் தேட மாட்டோம். கடவுள் நமக்குத் தேவைப்பட மாட்டார்.

ஆனால், ரம்யா, நினைப்பதில் எதுவுமே நடக்காவிட்டால், தெய்வம் ஏதுமில்லை என்று எனக்குத் தோணுது? ;எப்படி நினைப்பதெல்லாம் நடப்பதில்லை என்பது உண்மையோ, அப்படியே நினைப்பதில் எதுவுமே நடக்காமல் போவதில்லை என்பதும் உண்மை தான் ,

;ஆம், உன் வார்த்தை எல்லாம் என் மனசுக்கு வல்லமை தருது ! ரம்யா ! ;வாழ்க்கையின் அர்த்தம் நமக்கு ஆரம்பத்தில் புரியறது இல்லை. வாழ்க்கையில் சந்தோஷம் என்பது நம்ம கையில தான் இருக்குது. இதை உணராம இருக்கிறபோது சந்தோஷம் நமக்குக் கிடைக்காது. நம்ம கையில தான் நம் சந்தோஷம் இருக்குதுன்னு எப்போ உணர ஆரம்பிக்கிறோமோ அப்போதிருந்து அது நமக்குக் கிடைச்சிடுது.

ஆம், ரம்யா நீ கூறும் உபதேசங்கள் எனக்கு மிகவும் உபயோகமாக இருக்கு. என் மனம் தடுமாறும் போது உன் போதனைகள் என்னைத் தூக்கி நிறுத்துது !

;ரம்யா, நீ ஜெகனுக்காக எந்த விதத்திலும் ஈடுபட வேண்டாம். அது உனக்குப் பிரச்சினையைத் தான் உண்டாக்கும்.

;இல்லை நந்தினி ! எனக்கு எந்தப் பிரச்சினையும் உண்டாகாது. நான் செய்வது தவறானது அல்ல என்னும் போது நான் எதற்கும் பயப்படத் தேவையில்லை, ;ச˚கம் நீ செய்வதை ஏற்றுக் கொள்ளாது உன்னைப் பழிக்கும் படி நீ நடந்து கொள்ளக் கூடாது.

;ச˚கம் என்பது யார்? ˚ன்றாவது மனிதர் பழி கூறுவதைப் பற்றி எனக்குக் கவலையில்லை;, ; ச˚கம் என்பது உன் அருகில் உள்ளவர்கள். உன்னைச் சுற்றியுள்ள அண்டை வீட்டார் அயலார் ஆவார்கள் , ;யாரைப் பற்றியும் எனக்கு அக்கறை இல்லை. பாவம் செய்வது தவிர வேறு எதற்கும் நான் அஞ்சத் தேவையில்லை !,

;பார்க்கிறவர்களுக்குத் தப்பாகத் தெரியும் படி நாம் எதையும் செய்யக் கூடாது ! ;தப்பு நடக்காத போது, அவர்களுக்கு ஏன் அது தப்பாகத் தோன்ற வேண்டும்? பனை மரத்துக்கடியிலிருந்து நாம் பாலைக் குடித்தாலும், அது கள் என்று தான் உலகம் சொல்லும் ,

;அப்படித் தவறான கண்ணோட்டத்துடன் உலகம் பார்க்குமானால், ஆந்த உலகத்தைப் பற்றி எனக்குக் கவலை இல்லை ,

;உனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. உனக்கும் சுரேஷுக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடக்கப் போகிறது. சுரேஷ் தவறாக நினைக்க நீ இடம் தரக்கூடாது !,

நந்தினியின் உபதேசம் ரம்யாவின் செவியில் ஏறவில்லை. எனவே நந்தினி தன் உபதேசத்திற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, ரம்யாவிடம் விடை பெற்றுச் சென்றுவிட்டாள். ஞாயிறு அன்று ஜெகன் இருக்கும் மருத்துவமனைக்கு ரம்யா சென்றாள். ;டாக்டர், ஹவ் இஸ் ஜெகன்ஸ் டிரீட்மென்ட் பிராகரசிங்? !

;மிஸ் ரம்யா, ஐ ஆம் ஹாப்பி அபௌட் தி பிராகரஸ், இட் இஸ் இன டீட் வெரி ரிமார்கபிள் அன்ட் பாஸ்ட் ! ;டாக்டர், எனக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கு ! என் நிச்சயதார்தத்துக்கு முன்பு ஜெகன் நார்மலாகிடனும்.

;மிஸ் ரம்யா ! ஜெகனுக்கு முதலில் திருமணம் நடந்து, அதற்குப் பின்பு திருமணம் செய்றதுதான் நல்லது ! ; ஏன் டாக்டர் ! இது மெடிக்கல் அட்வைசா ?

;இது மெடிக்கல் அட்வைஸ் இல்ல ஆனா பிராக்டிகல் அட்வைஸ் , ஜெகன் பரிபூரணமா குணமாகும் வரை, ரம்யாவின் ஆதரவு துண்டிக்கப் பட்டதாக ஜெகன் உணரக் கூடாது. ;ஓ.கே டாக்டர், என் திருமணத்திற்கு முன் ஜெகனுக்குத் திருமணம் நடக்கும் இது உறுதி, டாக்டர் , எந்தக் காரியமும் ரம்யா தீர்மானித்துவிட்டால் அது நடந்த மாதிரி தான். ஜெகனுக்கு பரிபூரணமாக சுகம் கிடைத்தவுடன் பெண் பார்த்து திருமணம் நடத்தி விட அவனது பெற்றோரிடம் சொல்ல வேண்டும் என்ற முடிவுடன் மருத்துவமனையை விட்டு வெளியேறினாள்.

திருமணம் நடைபெறும் போது இனி பெண்ணைக் கைப்பிடித்து வழி நடத்திச் செல்வது கணவன் தான் என்று பலரும் நினைக்கின்றனர். வாழ்க்கைத் துணை என்று பார்க்கும் போது துணைவன், துணைவி என இரண்டு சொற்களும் உள்ளன. கணவன் மனைவி இருவருமே ஒருவருக்கு மற்றவர் துணை என்றே பொருள் வரும். ஆண், பெண் இரு பாலினரில் பெண் என்பவள் பலவீனமானவாள் என்ற காரணத்தினாலேயே, வழி நடத்தப்பட வேண்டியவளாகக் கருதப்படுகிறாள். ஆனால் இல்வாழ்க்கையில் இன்னல்கள் சூழ்கையில் துணைவனோ துணைவியோ யார் வேண்டுமானாலும் வழி நடத்தலாம்.

ஜெகன் பழைய நிலைக்குத் திரும்பி விட்டால் கூட, அவன் மெல்லிய மனம் படைத்தவன் என்பதால் அவனை வழி நடத்தவல்ல ஒரு துணை வேண்டும் என ரம்யா நினைத்தாள். தான்

இனி ஒரு கணம் கூட ஜெகனின் வழிகாட்டி என்னும் பங்கை ஏற்றுக் கொள்ளக் கூடாது எனத் தீர்க்கமாக முடிவு செய்தாள். வழிகாட்டுவதற்கென ஒரு பெண்ணைத் தேர்வு செய்து ஜெகனுக்குத் திருமணம் செய்து வைத்து விட வேண்டும் என்று தீர்மானித்தாள். பந்தலை ஆதாரமாகக் கொண்டு பூங்கொடி நிற்கும் என்பது உலக நடப்பு, ஆனால் ஒரு கொடியை ஆதாரமாகக் கொண்டு பந்தல் நிற்குமா? ஜெகன் என்ற பந்தலைத் தாங்கும் பூங்கொடியாக ஒரு பெண்ணைத் தேடுவதற்கு ரம்யா முடிவெடுத்தாள்.

ரம்யாவுக்கு சுரேஷிடமிருந்து செல்போனில் கால் வந்தது. சுரேஷ் பேசினான். ;ரம்யா, நான் கேள்விப்படுவது உண்மையா? நீ ஜெகனைப் பார்க்க ஹாஸ்பிடலுக்குப் போனாயா? ;ஆம், நான் டாக்டரிடம் ஜெகன் பற்றி கேட்பதற்காகப் போனேன். ;உனக்கும் ஜெகனுக்கும் என்ன தொடர்பு ? நீ அவனை காதலித்தாயா? ;சுரேஷ், நான் ஜெகனைக் காதலிக்கவில்லை. அவர் தான் என்னை விரும்பி இருக்கிறார்.

;நீ ஜெகனை விரும்பவில்லை என்பது உண்மையானால், நான் சொல்கிறபடி நட. ஜெகனை நீ பார்க்கக்கூடாது. அவனிருக்கும் திசைப்பக்கம் கூட நீ திரும்பக் கூடாது.

; சுரேஷ், நூன் சொல்வதை நம்புங்க, நான் இந்த நிலையில் ஜெகனை விட்டுவிட முடியாது, என்னால் தான் ஜெகனுக்கு மனநிலை பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்போது அவர் டாக்டரிடம் டீரீட்மென்ட் எடுக்கிறார். அவர் பழைய படி குணமானவுடன் விலகிக் கொள்கிறேன். !

;ஜெகன் எப்படிப் போனால் உனக்கென்ன ? சரியான லூசு அவன், ஒருத்தியின் விருப்பத்திற்கு மாறாக அவளை வற்புறுத்தக்கூடாது என்பது கூட தெரியாத மடையன் அவன்

!. ஜெகனுக்குக் குழந்தை மனசு, பாவம் ! விரைவில் குணமாகி விடும் என்று டாக்டர் சொல்றார். அதற்குப் பின்பு ஜெகன் பற்றிய கரிசனையை நான் விட்டு விடுகிறேன். !

;ரம்யா ! நீ அவன்பால் அக்கறை காட்டத் தேவையில்லை. அவன் விஷயத்தை இன்றுடன் விட்டுவிடு, இல்லையென்றால் நான் உன்னை விட்டுவிட வேண்டியதிருக்கும் !. ;சுரேஷ் மனிதாபிமானமில்லாமல் என்னால் நடக்க முடியாது, ;அப்படின்னா, நான் உன்னை விட்டு விடுகிறேன். நம் திருமண நிச்சயதார்த்தம் முறிந்து விட்டது. தொலைபேசித் தொடர்பை சுரேஷ் துண்டித்துவிட்டது ரம்யாவுக்குத் தெரிந்தது. ரம்யாவுக்குச் சுரேஷின் செயல் பிடிக்கவில்லை. தன்னுடைய நிலையை நன்கு விளக்கிச் சொன்ன பிறகும், பிடிவாதமாக அவன் இருப்பது சரியாகத் தோன்றவில்லை. ஏற்பட்டுள்ள தலைகுனிவை அவனது பெற்றோரால் தாங்கிக் கொள்ள முடியாது. அவர்களிடம் பக்குவமாக எடுத்துச் சொல்லி தேற்ற வேண்டும் என முடிவு செய்தாள்.

சைக்யாட்ரிஸ்ட் என்ன மாயம் செய்தாரோ மந்திரம் பண்ணினாரோ, ஜெகன் பரிபூரண சுகம் பெற்றுவிட்டான். ரம்யாவைச்சந்திக்கும் முன்பு இருந்த நிலைக்கு அவனது மனம் வந்து விட்டது. குப்பை கூளங்கள் அகற்றப்படுவது போல, அவன் மனத்திலிருந்து ரம்யாவின் பகுதி முழுவதும் அகற்றப்பட்டு விட்டது. ரம்யா வந்ததும் போனதும் முற்றிலும் அழிக்கப்பட்டு விட்டது. டாக்டரிடம் ரம்யா கேட்டாள். ;டாக்டர், இனி நான் ஜெகனைப் பார்க்கலாமா?

;ஓ, யெஸ், நோ பிராப்ளம் யூ கான் மீட் ஹிம் ! ஜெகனை டாக்டர் அறையில் ரம்யா பார்த்தாள். ஜெகனின் முகத்தில் மலர்ச்சி தோன்றியது. ;ரம்யா நீ எப்படி இருக்கிறாய். உன் படிப்பு எப்படி உள்ளது? ; ஜெகன், ஐ ஆம் பைன், ஐம ஸ்டடீஸ் ஆர் கோயிங் ஆன் வெல் !

ரம்யாவைச் சந்திக்கும் முன்னிருந்த பழைய நிலைக்கு ஜெகன் வந்து விட்டான். சில நேரங்களில் மனித மனம் பலவீனப்பட்டு நிற்கும். அந்த நேரங்களில் மன அழுத்தம், முன உளைச்சல் காரணமாக சகஜ நிலையிலிருந்து பிறழ்வு நேரிடலாம். வலுப்படுத்துவதற்கு தகுந்த ஆலோசனையும், வழி காட்டலும் தரப்பட்டால் மனம் முழுமையாகப் பழைய நிலைக்கு வந்து விடும்.

---

ரம்யா உளவியல் மாணவி, சுரேஷ் கொடுத்த அதிர்ச்சியால் அவள் மனம் துவண்டு விடவில்லை. மாறாக ஜெகனின் எதிர்காலத்தைப் பற்றி எண்ணத் துவங்கினாள். ஜெகனுக்கு ரம்யா இரண்டாவது வாழ்வு கிடைப்பதற்கு வழி வகுத்திருக்கிறாள். அவன் ரம்யாவைப் பார்த்து வெறித்தனமாக காதலித்ததும், ரம்யா அவனை ஏற்றுக் கொள்ளாத நிலையில் ஏமாற்றத்தினால் புத்தி பேதலித்ததும் பற்றிய நினைவுகள் அனைத்தும் சிகிச்சை ˚லம் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது மனம் பலவீனம் நீங்கி உறுதிப்பட்டிருக்க வேண்டும். ஜெகன் மற்ற பெண்களைக் குறித்து எப்படி நடந்து கொள்கிறானோ, அது போன்றே ரம்யாவைக் குறித்தும் நடந்து கொள்கிறான். அவளைக் காதலிப்பதை விட்டு விட்டான். இந்த மாற்றம் தான் மன நல மருத்துவத்தின் சாதனையாகும். ஒரு மனத்தை மாயா ஜாலத்தினால் மாற்றுவது போல மருத்துவக் கலை மாற்றியுள்ளது விந்தையிலும் விந்தை ஆகும்.

ரம்யா ஜெகனின் பெற்றோருடன் கலந்தாலோசித்தாள். அவனது படிப்பு முடிய இன்னும் உள்ள சில மாதங்களில், ஜெகனுக்குப் பெண் தேடும் படலம் துவங்கியது. அப்படிக் கிடைத்தவள்தான் ரேகா. துணிவும், துடிப்பும் மிக்கவள் ஆங்கில இலக்கியத்தில் எம்.ஏ.பட்டம் பெற்றவள். அவளிடம் ஜெகன் பற்றி ரம்யா அனைத்தையும் கூறினாள். ஜெகன்

எந்த தீய பழக்கமும் இல்லாதவன். அன்பும் பாசமும் உடையவன் என்பது ரேகாவுக்குப் போதுமானவையாக இருந்தன. மிஞ்சியவற்றைத் தன்னால் சமாளிக்க முடியும் என்று நம்பினாள். எனவே ஜெகனுக்கும் ரேகாவுக்கும் திருமணம் ஒழுங்கானது. பழைய ஏமாற்றம் எல்லாம் மறைவதற்கு, புதிய உறவு வழி வகுக்கும் என்று அனைவரும் கருதினர். சுரேஷ் ரம்யாவை நிராகரித்து விட்டபின் நந்தினிக்கு ரம்யாவின் மீது மிகுந்த பரிவு ஏற்பட்டது. அவளை அடிக்கடி சந்தித்து உற்சாக ˚ட்டினாள். உலகில் பண்பில் உயர்ந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அதை உணர்த்தும் பொருட்டு, உண்மை சம்பவம் ஒன்றை நளினி எடுத்துரைத்தாள்.

ஜாஸ்மினுக்குத் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. அமெரிக்காவிலிருந்து ஜாஸ்மினின் மாமா இந்தியாவுக்கு வரும் போது திருமணம் வைத்துக் கொள்ள முடிவானது. அதற்கு இன்னும் ˚ன்று மாதங்கள் இருந்தன. திருமணத்திற்கென ஒரு பெண்ணையோ பையனையோ தேர்வு செய்யும் போது இருவர் பக்கத்திலும் சில எதிர்பார்ப்புகள் முன் விருப்பங்கள் இருக்கும். பெண் பார்க்கும் போது படிப்பு, அழகு சிவப்பு நிறம், உயரம், சொத்து, ஜாதி , அந்தஸ்து என ஒரு நீண்ட பட்டியல் இருக்கும். அது போன்றே மாப்பிள்ளை தேடும் போது நல்ல வேலை, படிப்பு, உயரம் என்று பார்ப்பார்கள். நிறைய சொத்து உள்ள போது நிறம் போன்றவை விட்டுக் கொடுக்கப்படும்.

ஜாஸ்மினைப் பார்க்க வந்த மாப்பிள்ளை நல்ல குடும்பம், நல்ல குணம் என்று கருதியே வந்தார். பார்த்த பின்பு என்ன முடிவு சொல்வாரோ என்று பலரும் பதட்டத்தோடு இருந்தனர். அவர் சம்மதித்து விட்டது தெரிந்த பின்பே நிம்மதி அடைந்தனர். ஜாஸ்மினுக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. திருமணத்தை ˚ன்று மாதம் தள்ளி நடத்த ஒத்துக் கொண்டது தவறு என ஜாஸ்மின் வீட்டார் நினைத்தனர். பேசி முடித்து விட்டால், திருமணத்தை சட்டுப்புட்டென்று வைத்து விட வேண்டும், ஆறப் போடக் கூடாது என்று கூறினர்.

திருமண அழைப்பிதழ் அச்சிடப் பட்டுவிட்டது. இன்னும் இரண்டு மாதங்களே இருந்தன. ஜாஸ்மின் ஸ்கூட்டரில் செல்லும் போது வேகமாக வந்த கார் அவள் மீது மோதி அவளது இடுப்பில் முறிவு ஏற்பட்டு விட்டது. கீழே விழுந்தவளால் எழும்ப முடியவில்லை. ஜாஸ்மின் உள்ளம் உடைந்து போனது. இனி, தன்னால் எழும்பி நடக்க முடியாது படுத்த படுக்கையாகி விடக் கூடும் என்ற பயம் பற்றிக் கொண்டது. திருமணம் நின்று விடும் என்று அஞ்சினாள். சோக சித்திரமாக மாறி விழிகள் குளமாயின. எனவே மாப்பிளளையாக வரப் போகிறவரிடம் விபத்து பற்றி கூறவில்லை. செல்போனில் அவளது கிலாஸ்மேட்டை அழைத்தவுடன் அவன் வந்து அவளை அப்படியே தூக்கிச் சென்று ஹாஸ்பிடலில் சேர்த்துள்ளான். தனக்கு மனைவியாகப் பேகிறவனை அள்ளி எடுத்து தூக்கியவனை மாப்பிள்ளையாக வரப் போகிறவன் சந்தித்து நன்றி கூறுகிற பண்பு மிக்க வரும் உலகத்தில் இருக்கிறார்கள் என்ற சம்பவத்தை நந்தினி கூறி, ரம்யா சுரேஷின் நிராகரிப்புக்கு வருத்தப்படாதவாறு பார்த்துக் கொண்டாள்.

*******************************************************************************************

சென்னை விமான நிலையம் அதிகாலை இரண்டு மணிக்குத்தான் விமானம் புறப்படும் என்ற போதிலும் இரவு 11 மணிக்கெல்லாம் ரம்யா விமான நிலையத்திற்கு வந்து விட்டாள். முதல் முறையாக அமெரிக்காவுக்குச் செல்கிறாள். ரம்யாவுக்கு எந்த விதப் பதட்டமும் இல்லை. மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கவும் இல்லை. தாய் நாட்டை விட்டுப் போகிறோமே என்று கலங்கவும் , இல்லை ஒரு துறவியினுடைய மனம் போல், ஏந்த விதச் சலனமும் இன்றி இருந்தது ரம்யாவின் மனம்.

ஆண், பெண் வேறுபாடு உடலைச் சார்ந்தது தான். மனத்தைச் சார்ந்ததல்ல. ஆம் ரம்யா இப்போது பாலினத்தைத் தாண்டி நிற்கும் ஒரு உயிர். பெண்ணின் மெல்லிளம் உணர்வுகளுக்கு ரம்யா விடையளித்து விட்டாள். பரிவு, பாசம், சொந்தம் பந்தம் என்னும்

தளைகளினின்று தன்னை விடுவித்துக் கொண்டாள். வாழ்வில் ஏற்பட்ட அனுபவங்கள் கற்றுத் தந்த பாடங்கள் அவளுக்குத் துணை நிற்கின்றன இன்பம், துன்பம் இரண்டையும் ஒன்று போல் ஏற்றுக் கொண்டால் நிம்மதிப் பூ நெஞ்சில் மலரும் என்பது அவள் கற்றுக் கொண்ட பாடங்களில் ஒன்று ஆகும். ;தனக்கென வாழ்வு இல்லை என்றானால், பிறருக்காக வாழந்திடலாம் ' தனது வாழ்க்கையில் பூக்காத மகிழ்ச்சி மலர்களைப் பிறரது வாழ்க்கையில் பூக்க வைக்கலாம் என்று உணர்ந்து கொண்டாள் ரம்யா.

சுயநலத்துக்காக அவள் அமெரிக்கா செல்ல முடிவு செய்யவில்லை. மனித மனத்தின் சிறப்பு ரம்யாவுக்குத் தெரியும். மன அழுத்தம், மன இறுக்கம் காரணமாகச் சின்னா பின்னமாகி நிற்கும் மனிதர் தம் வாழ்வில் மீண்டும் சகஜ நிலை ஏற்படுத்துவதற்கு, உளவியல் ஆலோசகராகத் தன்னாலான பங்கினை ஆற்ற அவள் எடுத்த முடிவு ரம்யாவை இயக்கிக் கொண்டிருக்கிறது.

..............................................................................................................................................................................................................................................................,

ஞாயிறு இரவு 9 மணி, ஜெகனின் செல்போன் ஒலிக்கிறது. ஜெகன் அழைப்பை ஏற்றதும், ரம்யாவின் தேன்குரல் ஸ்பீக்கர் போனில் இழைகிறது. ஹவ் ஆர் யூ, ஜெகன்? ஹவ் இஸ் ரேகா? , ஜெகன் பதில் கூறுகிறான். வீ ஆர் பைன், ஐ ஆம் எக்ஸ்டிரீம்லி ஹாப்பி ரேகா உற்று நோக்குகிறாள். உலகின் மறு முனையில் உள்ள ஒரு அன்பு உள்ளம் தன் மூலம் பாயும் இன்ப வெள்ளத்தை அளவிடல் முடியுமோ? ( முற்றும் )